(கு.வி.மு.ச.அத்தியாயம் XXIII)

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இராதாபுரம்

**அசல் வழக்கு எண்.**

**அ.வ எண்.** 63/2020

வாதி தரப்புக்காக சாட்சியின் சான்றுரைகள் வா.சா.2

| | | |
|---|---|---|
| பெயர் | : | பிராங்ளின் |
| த/பெயர் | : | அந்தோணி அருளப்பன் |

2024 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17 ஆம் நாளன்று, 1969 ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–ன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –**

1) எனக்கு தற்போது 50 வயது ஆகிறது. வழக்கு தாக்கல் செய்யும் போது 45 வயது ஆகும். நான் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்ய நானும் என் அம்மாவும் விவரம் தெரிந்தோம். பிரதிவாதிகள் எனக்கு சொந்தம் தான். பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரை விவரத்தை எனது வழக்கறிஞர் கூறினார். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்தீர்கள் என்றால் பாதைக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. பாதை எனது சொந்த பாதை ஆகும். அதன் அகலம் 4 அடி ஆகும். நீளம் எவ்வளவு என்றால் அதன் நீளம் சரியாக அளவு தெரியாது. அது கடற்கரை வரை நீண்டு செல்கிறது. அது கிழமேல் பாதை ஆகும்.

2) மேற்படி பாதை எனது சொந்த பாதை என வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சர்வே எண். 509/2 A ஆகும். அதன் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 5 சென்ட் ஆகும். மேற்படி சொத்தில் எங்களுக்கு 26 1/4

சென்ட் பாத்தியப்பட்டது ஆகும். மொத்த விஸ்தீரண்த்தில் நாங்கள் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து 26 1/4 சென்ட் பாத்தியம் ஆகும் எந்த தேதியில் பாகப்பிரிவினை செய்யப்பட்டது என்றால் அது எனக்கு தற்போது நினைவில்லை. பாகப்பிரிவினை நடைபெறும் போது நான் எனது சகோதரிகள் இருந்தார்கள். சேத்திர பாவு மகன் சந்தியாகு மற்றும் அவரது மனைவி மேரி அவரது பிள்ளைகளும் இருந்தார்கள். அவர்களின் குழந்தைகளின் பெயர்கள் எனக்கு தெரியாது.

3) பாகப்பிரிவினையை நாங்கள் எழுத்து பூர்வமாக எழுதி கொண்டோம். அது வ.சா.ஆ.1 ஆவணம் ஆகும். முதல் விசாரணையில் பத்தி 4 ல் 40 வருடத்திற்கு முன்பு வாய் மொழியாக பாகப்பிரிவினை செய்ததாக குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை நடைபெற்ற விபரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையில் தான் 26 1/4 சென்ட் ஒதுக்கப்பட்டதாக கட்சி செய்கிறேன். மேற்படி சொத்தில் மற்ற பாகஸ்தாரர்களுக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டது என்றால் சேத்திர பவுல் வகையறாக்கு 26 1/4 சென்ட் சங்கள் அந்தோணி வகையறாக்கு 50 சென்ட் ஒதுக்கப்பட்டது. மேற்படி விபரம் உங்களுக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். மேற்படி 26 1/4 சென்ட் ஒதுக்கப்பட்ட சொத்திற்கு தனிப்பட்டா எதுவும உங்கள் தந்தை பெயரிலோ, உங்கள் பெயரிலோ கிடையாது என்றால் சரிதான்.

4) உங்களுக்கு பாத்தியப்பட்ட 26 1/4 சென்ட்க்கு நிலத்திற்கு நிலத் தீர்வை எதுவும் செலுத்தவில்லை என்றால் சரிதான். மேற்படி சொத்து உங்கள் அனுபவத்தில் காண்பிக்கக்கூடிய ஆவணம் எதுவும் காட்டவில்லை என்றால் சரிதான். வ.சா.ஆ.1 தாக்கல் செய்துள்ளேன். வ.சா.ஆ.1 ஐ தவிர வேறு எதுவும் ஆவணம் கிடையாது என்றால் சரிதான். வ.சா.ஆ.1 ல் உள்ள 6 பாகப்பிரிவினை ஆவணங்களிலும் 25 சென்ட் நிலத்தை தான் பாகப்பிரிவினை செய்து கொண்டதாக உள்ளது என்றால் சரிதான். பாகப்பிரிவினை ஆவணத்தின் படி நாங்கள் அளவு செய்து பிரிக்கவில்லை வாய்மொழியாக தான் செய்து கொண்டோம். எனக்கு பாகப்பிரிவினையில் 3 1/2 சென்ட் பாத்தியப்பட்டது

ஆகும். மேற்படி இடத்திற்கு தனிப்பட்டா எதுவும் பெறவில்லை என்றாலும், தீர்வை எதுவும் செலுத்தவில்லை என்றாலும் சரிதான்.

5) வ.சா.ஆ.1 30.12.2019 ல் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு 14.02.2020 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வ.சா.ஆ.1 ஐ தவிர வேறு உங்கள் அனுவத்தை காட்ட வேறு ஆவணம் எதுவும் கிடையாது என்றால் சரிதான். தபசில் சொத்து காலி மனை தான் என்றால் சரிதான். வழக்கு சொத்தை சுற்றி காம்பவுண்ட் சுவர் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்து காம்பவுண்ட் சுவருக்குள் வீடு ஒன்று உள்ளது என்றால் சரிதான். காம்பவுண்ட்க்கு வெளியே நீங்கள் உரிமை கொண்டாடுகீர்களா என்றால் நாங்கள் பாதையில் உரிமை கொண்டாடவில்லை. உங்கள் வீட்டிற்கு மேல்புறம் தென் வடல் பாதை 15 அடி அகலத்தில் உள்ளது என்றால் ஒரு கார் செல்லும் அளவிற்கு பாதை உள்ளது. மேற்படி பாதை கோவிலுக்கு சென்று கடற்கரையில் முடிவடைகிறது. மேற்படி பாதை தான் பொது மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி பாதைக்கு மேல்புறம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட வீடு மற்றும் 25 தனிநபர் வீடு உள்ளது என்றால் சரிதான்.

6) மீன்வளத்துறையில் இருந்து இலவச வீடுகள் சர்வே எண் 509/1 ல் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வ.சா.ஆ.2 மேற்படி நபர்கள் அரசுக்கு நன்கொடை கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். மேற்படி நபர்களுக்கு இலவச வீடு கட்டி கொடுப்பதற்காக மேற்படி இடத்தை எழுதி கொடுத்து இருக்கிறார்கள் என்றால் சரிதான். உங்கள் இடத்திற்கு மேல்புறம் பாதை உள்ளது. மேற்படி பாதைக்கு மேல்புறம் தான் இலவச வீடு கட்டி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாதையில் மின் இணைப்பு, மின் கம்புகள், மின் விளக்குகள், குடிநீர் இணைப்புகள் அனைத்தும் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இலவச வீடுகளுக்கு முன்பு பூவரசம் மரம், தேக்கு மரம் ஆகியவை நட்டு வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வீடுகள் 1998 முதல் கட்டப்பட்டது என்றால் சரிதான். மேற்படி

பாதையில் நீங்கள் கயிறு கட்டி முள்ளை வைத்து அடைத்தீர்கள் என்றால் சரியல்ல.

7) பிரதிவாதிகள் தாசில்தார் அவர்களுக்கு மனு கொடுத்து அளக்கப்பட்ட ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது என்றால் பொய்யாக புகார் கொடுத்து அளக்கப்பட்டது. தாசில்தார் அளவீடு செய்து எல்கை கற்கள் நடப்பட்டது என்றால் சரிதான். தாசில்தார் அளவீடு செய்த போது உங்கள் வீட்டின் மேல்புறம் காம்பவுண்ட் சுவர் சர்வே எண். 509/1 6 அடி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டது என்றால் சரியல்ல. ஆக்கிரமிப்பு அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் உங்கள் இடத்திற்கு வந்து இடையூறு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். வருவாய் துறையினரிமிருந்து ஆக்கிரமிப்பு அகற்ற நடவடிக்கை எடுக்க கூடாது என்பதற்காக அவசர கதியில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. பிரிவின்றி உள்ள சொத்தில் பாகப்பிரிவினை பரிகாரம் கோராமல் உறுத்துக் கட்டளை மற்றும் நிரந்தர கட்டளை கோரும் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

8) உங்கள் வழக்குரையுடன் பட்டா எண். 1530 தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். அதில் 509/2A 12 நபர்களின் பெயரில் கூட்டு பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். அந்த பட்டாவில் உங்கள் பெயரோ, உங்கள் தகப்பனார் பெயரோ ஏனைய வாதிகளின் பெயரோ இல்லை என்றால் சரியல்ல. வேண்டும்மென்றோ உண்மை சங்கதிகளை மறைத்து பொய்யான வழக்கு மூலத்துடன் தாக்கல் செய்த வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுப்படி செய்யபட வேண்டியது என்றால் சரியல்ல.

(ஓம்.)திரு.மு.ஆனந்த்,பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் (ம)
குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,
இராதாபுரம்.